**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 129** **நாள்: 02.09.2018**

**பெருநகர சென்னை மாநகராட்சி பொதுசுகாதாரத்துறையின் சார்பாக நடைபெற்ற பிளாஸ்டிக் தடுப்பு சிறப்பு விழிப்புணர்வு முகாமில் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு துருப்பிடிக்காத எஃகு குடிநீர் பாட்டில்கள் வழங்கப்பட்டன**

பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத் துறை சார்பாக சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில் பிளாஸ்டிக் உபயோகிப்பதினால் ஏற்படும் தீங்குகள் குறித்து பல்வேறு விழிப்புணர்வு முகாம்கள் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் முனைவர் தா. கார்த்திகேயன், இ,ஆ,ப., அவர்களின் அறிவுறுத்தலின்படி, சென்னை மாநகர் முழுவதும் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு பகுதியாக, தண்டையார்பேட்டை மற்றும் இராயபுரம் மண்டலங்களுக்குட்பட்ட காசிமேட்டில் உள்ள புனித தெரசா பெண்கள் மேல்நிலைப் பள்ளி மற்றும் வண்ணாரப் பேட்டையில் உள்ள சென்னை நடுநிலைப் பள்ளியில் பிளாஸ்டிக் உபயோகிப்பதினால் ஏற்படும் தீங்கு குறித்த விழிப்புணர்வு முகாம் 31.08.2018 அன்று நடைபெற்றது.

இம்முகாமில், பிளாஸ்டிக் உபயோகிப்பதினால் ஏற்படும் தீங்குகள், ஒருமுறை பயன்படுத்தக் கூடிய மக்காத பிளாஸ்டிக் பொருட்களை தவிர்த்து பாரம்பரியமாக பயன்படுத்தக் கூடிய வாழை இலைகள், பாக்கு மட்டை தட்டுகள், துணிப்பைகள், சணல் பைகள் போன்றவற்றை பயன்படுத்துவதன் அவசியம் குறித்தும் விளக்கப்பட்டது. மாணவ, மாணவியர்கள் அனைவரும் பிளாஸ்டிக் தவிர்ப்பு உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். மேலும், இம்முகாமில் கலந்து கொண்ட 1000 மாணவ, மாணவியர்களுக்கு இந்தியன் ஆயில் நிறுவனத்தின் (தென்னிந்திய குழாய் பதிப்பு) சார்பாக துருப்பிடிக்காத எஃகு குடிநீர் பாட்டில்கள் (Stainless Steel Water Bottles) வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில், பெருநகர சென்னை மாநகராட்சி சுகாதார கல்வி அலுவலர் முனைவர் T.G.சீனிவாசன், IOCL நிறுவனத்தின் CSR துணை பொது மேலாளர்கள் P.ராமகிஷோர், அனிருத்தா பட்டாச்சார்ஜி, மாவட்ட சுற்றுச்சூழல் ஒருங்கிணைப்பாளர் ஜி.தங்கராஜ், தலைமையாசிரியை மற்றும் ஆசிரிய பெருமக்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்**
**பெருநகர சென்னை மாநகராட்சி**